இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 165 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 12 – வெள்ளிக்கிழமை 26 ஜனவரி 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 165 : Thiruvalluvar Year - 2055 - Thai 12 - Friday 26 January 2024 - Dak 12 Pages ₹ 5.00

## தாய்மொழி – தமிழைக் காக்க தன் இன்னுயிரை ஈந்த

# மொழிப்போர்த் தியாகிகளின் நினைவிடங்களில் வீரவணக்கம்!

## தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் மரியாதை செலுத்தினர்! சென்னை – அண்ணா நகரில் வீரவணக்க நாள் கூட்டம்: தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஜன. 26-**

**தாய்மொழி - தமிழைக் காக்க தன் இன்னுயிரை ஈந்த மொழிப்போர்த் தியாகிகளின் நினைவிடங்களில் நேற்று காலை. தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினர். மேலும் மாலையில், கழக மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. சென்னை - அண்ணா நகரில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வீரவணக்க நாள் உரையாற்றினார்.**

பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத - வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

**தாய்மொழி காக்க களம் கண்ட தலைவர்கள் – தமிழறிஞர்கள்!**

1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.



**கலைஞரின் இந்தி எதிர்ப்பு போர்ப் பரணி!**

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, “கயல், வில், புலி” சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! – நீ
தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!”

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

**உயிர்நீத்த தியாக மறவர்கள்!**

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் - ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், ‘யாதொன்றும் புரிந்திட இயலாது’, என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

“செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்
தேகம் இருந்தென்ன லாபம்?”

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழப்பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள் தான், நேற்று (25.01.2024) மொழிப் போர்த் தியாகிகள் நினைவு நாள் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு - கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.



**தமிழகம் முழுதும் கழகத்தினர் வீரவணக்கம் செலுத்தினர்!**

நமது தாய்மொழி - தமிழைக் காக்க தன் இன்னுயிரை ஈந்த மொழிப்போர்த் தியாகிகளின் நினைவிடங்களிலும், திருவுருவப் படங்களுக்கும், நேற்று காலை, தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் மலர் வளையம் வைத்தும் மலர் தூவியும் மரியாதை செய்து வீரவணக்கம் செலுத்தினர்.

மேலும் மாலையில், கழக மாணவர் அணி சார்பில் இத்தியாகிகளின் தியாகங்களை போற்றிடும் வகையில், தமிழகம் முழுவதும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

**வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!**

மொழிப்போர்த் தியாகிகளின் வீரவணக்க நாளையொட்டி, சென்னை, அண்ணாநகரில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அதேபோல் ஆவடியில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகனும், மன்னார்குடியில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.யும்,

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேருவும்,

கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி - ஆண்டிபட்டியிலும், முனைவர் க.பொன்முடி - காஞ்சிபுரத்திலும், ஆ.இராசா எம்.பி. - நாமக்கல்லிலும் கனிமொழி கருணாநிதி எம்.பி. - தென்காசியிலும், அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. - மேட்டூரிலும் சிறப்புரையாற்றினர்.

உளுந்தூர் பேட்டையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியும், பல்லாவரத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

மேலும் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற மொழிப் போர்த்தியாகிகளின் வீரவணக்க நாள் கூட்டங்களில், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கலந்துகொண்டு அத்தியாகிகளின் தியாகங்களை விளக்கி சிறப்புரையாற்றினர்.

---

# வெறுப்புணர்வைப் பரப்புகிறது பா.ஜ.க.!

## மேற்குவங்க நியாய யாத்திரையில் ராகுல் குற்றச்சாட்டு!

*கொல்கத்தா, ஜன.26-*

*மேற்குவங்கத்தில் இந்திய நீதி பயணம் செய்து வரும் ராகுல் காந்திக்கு காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*நாடு முழுவதும், வெறுப்புணர்வு, அநீதி மற்றும் வன்முறையை பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். பரப்பி வருவதாக, காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டினார்.*



*காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி, மணிப்பூர் முதல் மும்பை வரை நியாய யாத்திரை மேற்கொண்டு வருகிறார்.*

*அசாம் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் யாத்திரை மேற்கொண்ட ராகுல்காந்தி, தற்போது மேற்கு வங்க மாநிலத்திற்குள் பயணத்தை தொடங்கி உள்ளார்.*

*அப்போது அசாம் மாநில காங்கிரஸ் தலைவர் புபேன் குமார் போரா, மூவர்ண கொடியை மேற்கு வங்க மாநில காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரியிடம் ஒப்படைத்தார். மேற்கு வங்க மாநிலம், கூச் பெஹொர் வந்த ராகுல்காந்தியை, அம்மாநில காங்கிரஸ் தலைவர் அதிர் ரஞ்சன் சவுத்ரி வரவேற்றார்.*

*அப்போது பேசிய ராகுல்காந்தி, நாடு முழுவதும், வெறுப்புணர்வு, அநீதி மற்றும் வன்முறையை பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் பரப்பி வருவதாக குற்றஞ்சாட்டினார்.*

*எனவேதான் நீதி கேட்கும் வகையில், தனது யாத்திரையில் நியாயம் என்ற வார்த்தையை இணைத்ததாக ராகுல்காந்தி கூறினார்.*

---

## கேரள சட்டமன்றத்தில்

# அரசின் முழு உரையைப் படிக்காமல் பாதியில் சென்ற ஆளுநர்!

## ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கியதாக குற்றச்சாட்டு!

*திருவனந்தபுரம், ஜன.26-*

*கேரள சட்டப்பேரவையில் ஆளுநர் ஆரிப் முகமது கான் தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்து விட்டு சென்றது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.*

*எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை செயல்பட விடாமல், ஆளுநர்கள் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசுக்கு அம்மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான் தொடர்ந்து பிரச்சினைகளை கொடுத்து வருகிறார்.*

*கேரளாவில் இன்று பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில், நேற்று சட்டமன்றம் கூடியது. அப்போது, ஆளுநர் ஆரிப் முகமது கான், 63 பக்கங்கள் கொண்ட தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்துவிட்டு சென்றுவிட்டார். கேரள அரசின் கொள்கை திட்டங்களை முழுமையாகப் படிக்க அவர் மறுத்துவிட்டார்.*

*சட்டப்பேரவைக்கு காலை 9 மணிக்கு வந்த ஆளுநர் ஆரிப் முகமது கான், 1 நிமிடம் 17 நொடிகளில் தனது உரையை முடித்துவிட்டார். 4 நிமிடங்களுக்குள் அவையில் இருந்து கிளம்பி விட்டார்.*

*கூட்டாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. உரிய நிதியை மாநிலத்துக்கு வழங்காததால் மாநிலத்தில் ஒன்றிய அரசே நிதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்ற பகுதிகள் ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்தது. இதனை ஆளுநர் வாசிக்கவில்லை. ஆளுநர் ஜனநாயகத்தை கேலிப் பொருளாக்கி சட்டமன்றத்தை அவமதித்ததாக அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன.*